
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 23 இதழ் – 4 ஏப்ரல் 2010

தனிப் பிரதி ரூ. 8/-



**கிறிஸ்துவின் சபை**

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

e-mail : Kangayamcofc@eth.net.

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

**பதிமூன்றாம் வேனிற்கால வேதாகம முகாம்**

மற்றும்

**"திருமறை தியானம்" நேயர்கள் &**
**"திருமறை ஆசான்" வாசகர்கள் கருத்தரங்கம்**

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

நாள் : **மே மாதம் 3,4,5, - 2010 (திங், செவ், புதன்)**

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

பதிவுக் கட்டணம் : **பெரியவர்கள் ரூ. 100 /- சிறியவர்கள் ரூ. 50 /-**

**முகாமின் சிறப்பம்சங்களை அறிய 15-ம் பக்கம் பார்க்கவும்.**

**கிறிஸ்துவின் சபை**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
PH. : 04257 - 230603 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு.**
**ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# ஆசானின் அறிவுரையில்...


1. ஆசிரியர் உரை ........ 1
2. உங்களால் என்ன செய்ய முடியும்? ........ 11
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 21
6. வேதாகமம் கொடுத்தலைப் பற்றிய புத்தகம் ........ 23
7. ஏமாந்து விடாதீர்கள்! ........ 27
8. ஆன்மீக வாழ்க்கைக்கான அளவுகோலை ஏற்படுத்துபவர் யார்? ........ 28
9. நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்? ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 23 APRIL - 2010 Issue - 4


ஆசிரியர் உரை

## எகிப்துக்கே....

உனக்கே அவ்வளவு இருக்கும்போது, அவனுக்கே அவ்வளவு தெரியுமானால், அவர்களுக்கே அவ்வளவு முடியுமானால், அதற்கே அவ்வளவு முக்கியத்துவமானால், அதுவே அவ்வளவு பெறுமானால் என்று இப்படி நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையின் சில சூழ்நிலைகளில் பேசியிருப்போம் அல்லது பேசக் கேட்கவாவது செய்திருப்போம். இல்லையென்று யாரும் மறுக்கமுடியாது. இப்படி ஒரு கிறிஸ்தவன் பேசுவது கிறிஸ்தவ அறத்திற்கு உடன்பாடான காரியமா அல்லது கிறிஸ்தவ நெறிக்கு அப்பாற்பட்டதா என்றெல்லாம் இங்கே நான் பேச வரவில்லை. மாறாக, எந்த சந்தர்ப்பங்களில் இப்படி ஒருவன் பேசக்கூடும் என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். ஆம், இப்படிப் பேசக் கூடிய சந்தர்ப்பங்களை நாம் கூர்ந்து கவனித்தால், ஓர் உண்மை புலப்படாமற் போகாது. தனிப்பட்ட இருவரின் திறமையையோ அல்லது இரண்டு கூட்டத்தாருடைய பலத்தையோ அல்லது இரண்டு இடங்களின் முக்கியத்துவத்தையோ அல்லது இரண்டு பொருள்களின் சிறப்பையோ ஒப்பிட்டுப் பார்த்து, ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் சம்பந்தமில்லாததாகவும் அல்லது மிகப்பெரிய வேறுபாடு கொண்டதாகவும் இருக்கும்போது, இப்படிப்பட்ட தொனியில் பேசப்படும். என்னுடைய இக்கருத்தை நீங்கள் ஓரளவுக்கேனும் ஒத்துக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இம்மாதத்திற்கான நமது தலைப்பையும், மேற்சொன்ன எனது கருத்தையும் வைத்து, இந்நேரம் நான் எங்கே வரப்போகிறேன் என்ற ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள். அப்படித்தானே!

சரி, இம்மாத தலைப்பை அலங்கரிக்கும் எகிப்தை, நான் எதனுடன் ஒப்பிடப்போகிறேன் என்பதை வெளிப்படுத்துவதற்கு முன், நாம் பார்க்க உள்ள எகிப்து பற்றி சில காரியங்களைத் தெரிந்து கொள்ளுவோம்.

பாலைவனப் பரப்பை பெரும் நிலப்பகுதியாகக் கொண்டு, இன்றைய உலகில் இருக்கும் 200க்கும் மேற்பட்ட நாடுகளில், தானும் ஒன்று என்றளவில், அந்த நாட்களின் பிரமிடுகள் தவிர, வேறெந்தச் சிறப்பையும், முக்கியத்துவத்தையும் பெற்றிராத எகிப்தல்ல நான் சொல்லும் எகிப்து. அது, உலக வரலாற்றில் பல நூற்றாண்டு கள் முத்திரை பதித்த பண்டைய எகிப்து. பழைய ஏற்பாட்டுச் சரித்திரத்தோடு, மிக நெருங்கிய தொடர்பு கொண்ட எகிப்து. இந்த எகிப்தைத் தவிர்த்து, தேவனுடைய திட்டத்தைப் புரிந்து கொள்ளவே முடியாது என்று சொல்லுமளவு முக்கியத் துவம் வாய்ந்த எகிப்து. பண்டைய காலந்தொட்டு, பார்வோன் களின் பல பரம்பரைகள் கண்டு, அரசியல் ரீதியாகக் கோலோச்சி, நாகரீக ரீதியாக வழிகாட்டி, கலாச்சார ரீதியாக முன் நடந்து, புகழ் ஏணியின் உச்சியில் குடியிருந்த எகிப்து. இப்படிப்பட்ட எகிப்துதான், முற்பிதாக்களில் மூன்றாமவரான யாக்கோபின் "பல வருண அங்கி மகனான" யோசேப்பின் எகிப்து. அக்கால கட்டம், பார்வோனின் பரம்பரையில், 15-வது பார்வோன் என்று நம்பப் படுகிற ராஜாவின் செல்வச் செழிப்பு மிக்க எகிப்து. இங்கே, நான் வர்ணித்த அந்த எகிப்து இவ்வளவு சிறப்புகளைக் கொண்டதாக இருந்தாலும், அது பாவ மனிதனால் ஆளுகை செய்யப்பட்ட பூமி யின் நாடுகளில் ஒன்று என்பதையும், ஒரு கட்டத்தில் தன் பொலி வை இழந்து, மாட்சிமையில் மங்கி, எல்லையில் சிறுத்து, மரியா தையை இழந்து போயிற்றென்பது கட்டாயம் நினைவில் கொள்ளவேண்டிய ஒன்று.

நாம் கண்ட அந்த கம்பீரமான எகிப்தில், சரி பிழைத்துப் போகிறான் என இருபது வெள்ளிக்காசுக்கு அடிமையாக விற்கப் பட்ட யோசேப்பு, நம் கர்த்தரின் தாங்கும் கரங்களால் ஏந்திச் செல்லப்பட்டு, அரியணையில் அமர்த்தப்படுகிறான். எகிப்தின் சிங்காசனம் தவிர, ஏனைய அனைத்தும் அவனது அதிகாரத்தின் கீழ். அவனுடைய செல்வாக்கிற்கு நிகரானவன் ஒருவனும் அங் கில்லை. அப்பொழுது ஏற்பட்ட கொடிய பஞ்சம் அவனைப் பார் வோனிலும் பிரபலமானவனாக மாற்றிவிட்டது. எகிப்தின் எல்லைக்குள் மாத்திரம் பார்வோன் கனம் பெற்றிருந்தான். பார்வோனைக் காட்டிலும், யோசேப்புடைய கீர்த்தியின் எல்லை மிகவும் விசாலமாகியிருந்தது. அது எப்படி என்று கேட்கிறீர்களா? இதோ வசன ஆதாரம். சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயி ருந்தபடியால், சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தில் தானி யம் கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள் (ஆதி. 41:57). ஆம், பார்வோனிடத்தில் அவர்கள் வராமல். யோசேப்பினிடத்திற்கு தான் வந்துள்ளார்கள்.

அன்றைய உலகிற்கு ஏற்பட்டது கடும் வறட்சி. அந்த வறட்சி பெற்றெடுத்த சவலைப் பிள்ளை பஞ்சம் தான். பஞ்சத்தின் உடன்பிறப்பு பட்டினி; இம்மூன்றும் அக்காலத்தில், எத்தேசத்தையும் விட்டுவைக்கவில்லை. எத்தேசம் என்று குறிப்பிடுவதற்குக் காரணம், வாக்குத்தத்த பூமியாகிய கானானும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லையென்பதே. பஞ்சத்தின் தன்மையை வேதாகமம் கொடியது எனக் கூறுகிறது. (ஆதி. 41:57). பஞ்சத்தைப் பற்றி பேசுவதும், எழுதுவதும் சுலபம். ஆனால், அதை அனுபவிப்பது கடினம். அதன் கோர முகம் அவ்வளவு கொடியது. இப்படிப்பட்ட பஞ்சம், யாக்கோபின் குடும்பத்தை சாவை எதிர்கொள்ளும்படி செய்தது. (42:1-3).

பஞ்சம், பஞ்சம் என்று பூச்சக்கரம் முழுவதும் புலம்பிக் கொண்டிருந்தாலும் (42:57) தேவனுக்கு பயந்து வாழ்ந்த யோசேப்பினிமித்தம் எகிப்து மாத்திரம் தப்பித்துக் கொண்டது. அங்கும் மழைத் தாழ்ச்சியினால் வறட்சி நிலவியது. ஆயினும் பஞ்சம் கடுமையாக இல்லை. கடுமை கொஞ்சம் தலைகாட்டிய போது, யோசேப்பின் சாமர்த்தியத்தால் சேமிப்புக் கிடங்கிலிருந்த தானியம் பண்டமாற்று முறையில் விநியோகிக்கப்பட்டு நெருக்கடி தீர்க்கப்பட்டது (47:17).

எகிப்தில் தானியம் கிடைக்கிறதென்ற செய்தியைக் கேள்விப்பட்ட யாக்கோபு, பென்யமீன் தவிர்த்த ஏனைய பத்துப் பேரையும், தானியங் கொள்ளும்படி பணத்துடன் அனுப்பி வைக்கிறான். அவர்களனைவரும் அதிபதி யோசேப்பைக் கண்ட மாத்திரத்தில் விழுந்து வணங்கினார்கள். (42:6) அடுத்த பயணத்தில், வேறு வழியில்லாமல், பென்யமீனையும் அனுப்பினபோது, 11 பேரும் யோசேப்பை முகங்குப்புறத் தரையிலே விழுந்து வணங்கினார்கள். (43:16,26). இவர்களை அடையாளம் கண்டு கொண்ட யோசேப்புக்கு, இவர்களின் வணங்குதல், தன்னுடைய இளமைக்கால சொப்பனத்தை நினைவுபடுத்தியது. அவர்களைச் சகோதரர்கள் என்று கண்டு கொண்டும், ஏதும் அறியாதவன் போல அவர்களைக் கடினமாய் நடத்தினான் (42:16) தன்னுடைய பிள்ளைப்பருவம் முதல் தேவனுக்குப் பயந்து வாழ்ந்த யோசேப்பு, தன் இளமைக்காலத்திலேயே, சகோதரர்களின் நலன் அறிய நெடுந்தூரம் நடைபயணம் மேற்கொண்ட யோசேப்பு, அவர்களைக் கண்ட மாத்திரத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல், ஆரத் தழுவி, தன்னுடைய அன்பை வெளிப்படுத்தாமல், ஏன் இப்படிக் கடுமையான நடத்தினான் என்பது, மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது விளங்காத ஒன்றாகவே படுகிறது. ஆயினும், குமுறிக்கொப்பளிக்கும் தன் உணர்வுகளையும், சிறகடித்துப் பறந்த தன் எண்ணங்களையும், அவன் வெகுபாடு பட்டுச் சிறைபிடித்து, அவர்களைத் தொடர்ந்து நடத்தின விதத்தைக் கவனித்தால், அதற்கு ஒரு மேலான நோக்கம் இருந்திருக்க வேண்டுமென்றே தெரிகிறது.

தன் சகோதரர்களைப் பஞ்சமும், பட்டினிச் சாவும் இல்லாத எகிப்திற்குள் அனுமதிப்பதற்கு, தன்னுடைய பாதுகாப்பில் அவர்

களைத் தங்க வைப்பதற்கு, தன் தயவால் அவர்கள் வாழ்ந்து சுகித்திருப்பதற்கு, அத்தேசத்தில் அவர்களுக்கென்று ஒரு இடத்தை ஒதுக்குவதற்கு, அவர்கள் தகுதியுடையவர்களாக இருக்கிறார்களா அல்லது தன்னுடைய தகப்பன் வீட்டிலும், தோத்தானிலும் தான் கண்ட அதே சகோதரர்களாக இருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பியுள்ளான். ஆகவே, அவர்களைச் சோதனை என்னும் குகைக்குள் செலுத்தி புடமிடுகிறான்.

தேவனுக்குப் பயந்த இந்த யோசேப்பு, தன் உடன் பிறந்த சகோதரர்களை, எகிப்திலே ஏற்றுக்கொள்வதற்கு முன், அவர்களைச் சோதித்து நடத்தின முறையை நாம் கவனித்தால், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு, அவைகளிலிருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்பது நன்றாகவே விளங்கும். ஆகவே, அப்பாடங்கள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

## I அவர்களின் உண்மை சோதிக்கப்பட்டது

யோசேப்பு, தன் சகோதரர்களை, தான் இருக்கும் எகிப்தில் ஏற்றுக்கொள்வதற்கு முன், முதலாவது, அவர்களின் உண்மையைச் சோதித்தான்.

தன்னுடைய பிள்ளைப் பருவம் முதல், தான் இஸ்மவேலர்களிடத்தில் விற்கப்பட்ட தனது பதினேழு வயது வரை, தன்னுடைய சகோதரர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். அவர்கள் துன்மார்க்கத்தனமானவர்களென்பதும், உண்மையில்லாதவர்களென்பதும் அவன் அறிந்த ஒன்றுதான் (ஆதி. 37:2). ஆனால், வருடங்கள் 22 உருண்டோடிவிட்ட பிறகு இன்னும் அதே உண்மையற்ற தன்மை நீடிக்கிறதா அல்லது அதற்கு ஒரு முடிவு வந்து விட்டதா என்று சோதித்துப் பார்க்க முடிவெடுத்தான். இன்னும் குறிப்பாக, தன்னை விலையாகக் கொடுத்த பிறகாகிலும், அவர்கள் மாறியிருக்கிறார்களா என்று அறிய விரும்பினான்.

ஆகவே, அவர்கள் தானியங்கொள்ள வந்தபோது, தானியத்தோடு சேர்த்து அவர்கள் கொண்டு வந்த பணத்தையும் போட்டனுப்பும்படி உத்திரவிடுகிறான். கொண்டு சென்ற பணம் திரும்ப வந்து விட்டதை, அவனுடைய சகோதரர்கள் இரண்டு கட்டமாகத் தெரிந்து கொண்டு (42:27,35) பயந்து நடுங்குகின்றனர். பிறகு மீண்டும் தானியங்கொள்ள வந்தபோது, ஏற்கனவே விட்ட பணத்தோடு அப்போதைய தேவைக்கும் பணம் கொண்டு வந்ததோடு, எங்களை அறியாமலேயே அந்த தவறு நடந்து விட்டதென்று வினயத்தோடு எடுத்துரைத்து, தவறுக்கு மன்னியுங்கள் என்ற பாணியில் நடந்து கொள்கின்றனர். (43:21)

கிட்டத்தட்ட 22 ஆண்டுகளுக்கு முன்பாக, யோசேப்பு கண்ட சகோதரர்கள் அல்ல நாங்கள் என்பதை இப்படித் தங்கள் செயல் மூலம் நிரூபித்துக் காட்டின யோசேப்பை விலையாகக் கொடுத்தற்குப் பிறகு, நாங்கள் மாறி விட்டோம் என்பதைத்

தெள்ளத்தெளிவாகத் தெரிவித்தனர். யோசேப்பை விலையாகக் கொடுத்தபின் அவர்கள் மாறியிருக்க வாய்ப்புண்டு என்பதை நான் ஆதாரமில்லாமல் குறிப்பிடவில்லையென்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். யோசேப்பு அவர்களைக் காவலி லிருந்து விடுவித்து, உங்கள் காரியம் மெய்யென்று விளங்க, உங்கள் இளையச் சகோதரனைக் கூட்டி வாருங்கள் என்று சொன்ன போது, ஒருவரை ஒருவர் பார்த்து யோசேப்பு நம்மைக் கெஞ்சிக்கேட்டும் அவன் மன வியாகுலத்தை நாம் கண்டு கொள்ளவில்லையே என்று தங்களுக்குள் சொல்லி கொண்டனர். (42:20,21) ஆகையால், துன்பம் வந்த பொழுதெல்லாம், அவர் கள் யோசப்பை நினைத்திருக்க வேண்டுமென்று இதிலிருந்து தெரிகிறது. அவர்களின் உண்மையற்ற வாழ்வு, யோசேப்போடு ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். எப்படியோ, அவர்கள் உண்மை சோதிக்கப்பட்ட போது தாங்கள் தேறியிருப்பதை எவ்வித சந் தேகத்திற்கும் இடமின்றி நிரூபித்து காட்டினர்.

சராசரி மனிதனாகிய யோசேப்பு இருந்த இடமாகிய எகிப்துக்குள், இன்னும், இப்பொழுது கிட்டத்தட்ட இருந்த இடம் தெரியாமல் போன எகிப்துக்குள் பிரவேசிப்பதற்கே, உண்மை சோதிக்கப்படுவது அவசியமானால், சர்வ வல்லமையுள்ள பரிசுத்த தேவன் வாசம் செய்யும், என்றென்றும் நிலைத்து நிற்கும் நித்திய வீடாகிய பரலோகில் பிரவேசிப்பதற்கு நம்முடைய உண்மை சோதிக்கப்பட வேண்டியது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள்.

அன்பான தேவனுடைய பிள்ளைகளே, நம்முடைய வாழ்வில் உண்மை எந்தளவு உள்ளது என்று நிதானித்துப் பார்ப்போம். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் உண்மையாக உள்ளோமா? நம்முடைய குடும்ப வாழ்வில் நம்மு டைய உண்மை எந்தளவில் உள்ளது? கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் உண்மையாக இருக்கிறோமா? பிள்ளை கள் பெற்றோருக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும் உண்மையாக இருக்கிறார்களா? அதற்கும் மேலாக, நம்முடைய வாழ்வில், மணவாளனாகிய இயேசுக் கிறிஸ்து, மணவாட்டியாகிய சபையை நேசித்து உண்மையாக இருப்பது போல, நாம் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் சபைக்கு உண்மையாக இருக்கி றோமா? சொல்லுங் கள். இன்னும், பரலோகத்தின் தேவன் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு கொடுத்த தேவ வசனங்களுக்கு நாம் உண்மையாக இருக்கிறோமா? வேத வசனங்களின் உபதேசப்படி நம்முடைய ஆன்மீக வாழ்வு இருக்கிறதா அல்லது மனித கோட்பாடுகளின் படி இருக்கிறதா? சத்தியத்திற்கு ஒப்புக்கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோமா அல்லது வெகுஜன அபிப்பிராயத்தின்படி நமது ஆவிக்குரிய வாழ்வை நடத்திக் கொண்டுள்ளோமா? உண்மைச் சத்தியம் தான் நம்மை விடுதலையாக்கும். (யோவான் 8:32) உண்மைச் சபைதான், நம்மை, தேவன் இருக்கும் பரலோ கத்திற்கு அழைத்துச் செல்லும், வேறு குறுக்கு வழி கிடையவே கிடையாது.

எகிப்தில் பிரவேசிப்பதற்கே "உண்மை" அவசியமானால், பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு, அது எவ்வளவு அத்தியாவ

சியம் என்பதை எண்ணிப்பாருங்கள். ஆகையால், நாம் எல்லா வற்றிலும், குறிப்பாக ஆவிக்குரிய வாழ்வில், வசனங்களின் உப தேசத்தில் உண்மையுள்ளவர்களாகவே இருப்போம்.

## II அவர்களின் பொறாமை குணம் சோதிக்கப்பட்டது

யோசேப்பு தன் சகோதரர்களை, தான் இருக்கும் எகிப்தில் ஏற்றுக்கொள்வதற்கு முன், இரண்டாவதாக அவர்களின் பொறா மை குணத்தைச் சோதித்தான்.

பொறாமை குணத்தின் பாதிப்பை யோசேப்பைக் காட்டிலும் அதிகமாக வேறு எந்த மனிதனாவது அனுபவித்திருப் பானா என்று யோசித்தால், கிட்டத்தட்ட இருக்க முடியாது என்று தான் பதில் வரும். ஒருவேளை, ஆதியிலே நடந்த முதல் கொலை யை பொறாமையின் விளைவால் தானே என்று சொன்னாலும் அது சடிதியாய் நடந்த ஒரு செயலாகையால், ஆபேல், பொறா மையின் விளைவை தன் வாழ்க்கையில் அனுபவிக்கவில்லை. ஆனால், யோசேப்பு தன் இளம் பிராயத்திலேயே அதை அணு, அணுவாக அனுபவித்தான். அதன் பாதிப்பு, அவன் அரியணை ஏறியபோதும் விட்டபாடில்லை. ஆகவே, அவர்கள் உண்மை நிரூபிக்கப்பட்டாலும், இக்காரியத்தில் அவர்கள் எந்தளவு தேறி யிருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள முடிவு செய்தான். குறிப்பாக, ராகேலின் தன் தாயாகிய குமாரனை அவர்கள் இன்ன மும் வெறுக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டினான்.

தங்கள் தகப்பனாகிய யாக்கோபிடம் கெஞ்சி, மன்றாடி, யூதாவின் உத்திரவாதத்தின் பேரில் இளையவன் பென்யமீனை எகிப்துக்கு இரண்டாம் தரம் வந்தபோது அழைத்து வந்தனர். தன் தாயின் மகனாகிய பென்யமீன் இவன் தான் என அறிந்த மாத்திரத்தில் அவன் உள்ளம் பொங்குகிறது. உணர்வுகளை அடக்க முடியாமல், அறைக்குள் சென்று அழுது முடித்து, வெளியே வந்து அவர்களுக்கு போஜனம் வையுங்கள் என்றான். (42:30,31) அங்கே அவர்கள் வயதின்படி வரிசையாக அமர வைக்கப்பட்ட தைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். பிறகு, ஆகாரம் பங்கிட்டு அனுப்பப்பட்டபோது, தன் தாயின் மகனாகிய பென்ய மீனுக்கு 5 மடங்கு கொடுத்தான். அவர்களனைவருக்கும் சிறந்த போஜனம் வயிறாரவே கொடுக்கப்பட்டிருக்கும். அங்கே பென்ய மீனுக்கு ஐந்து மடங்கு அவசியமில்லை. ஐந்து மடங்கு போஜ னத்தை அவனால் சாப்பிட்டிருக்கவும் முடியாது. அவனால் சாப்பிட முடியாதென்பது யோசேப்புக்கும் தெரியும். ஆயினும் ஒரு நோக்கத்தோடு அனுப்புகிறான். அதன் மூலம் அவர்களின் பொறாமை குணத்தை ஆராய்ந்தான். ஆனால், யாக்கோபின் குமாரர்கள் இச்சோதனையிலும் வென் றார்கள். அவர்கள் பானம் பண்ணி, அவனுடனே சந்தோஷமாயிருந்தார்கள் (43:34) என்று வசனம் சொல்லுகிறது. இருப்பினும் அவன், இன்னும் தன்னை வெளிப்படுத்தவில்லை.

அன்பானவர்களே, யோசேப்பு இருந்த எகிப்துக்குள் எட்டி வைப்பதற்கே "பொறாமை குணம்" துப்புரவாக இருக்கக் கூடா தென்றால், இக்கொடுங்குணத்தோடு, நாம் தேவன் இருக்கும், பரலோகத்தில் பிரவேசிக்க முடியுமா? முடியாது. முடியவே முடியாது.

இப்பொறாமை குணம் குறித்து ஞானி சாலமோன் எலும்பு ருக்கி என்று (நீதி. 14:36) சொல்லுகிறான். பொறுமையின் சிகர மான யோபு, பொறாமை புத்தியில்லாதவனை அதம் பண்ணும் என்று கூறுகிறான் (யோபு. 5:2) பொறாமை, எந்த மனிதனுக்கும், குறிப்பாக எந்தவொரு கிறிஸ்தவனுக்கும் எந்நன்மையையும் செய்யாது. இருப்பினும் இக்குணம் எல்லோரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. என்னிடம் இல்லையென்று யாரா வது சொல்லுங்கள் பார்க்கலாம்!.

அருமையானவர்களே, தங்களைக் கொடுமையான முறை யில் கட்டிப்போட்டிருந்த பொறாமையின் விலங்கை, யோசேப்பு விற்கப்பட்டதற்குப் பிறகு யாக்கோபின் குமாரர் தகர்த்தெறிந்த னர். அக்குணம், இப்பொழுது தங்களுக்கில்லையென்று செயல் மூலம் நிரூபித்தும் காட்டினர். ஆனால், இயேசுவுக்கு சகோதரர் களாய் இருக்கும்படியான (எபி. 2:11) பாக்கியம் பெற்ற கிறிஸ் தவர்கள், அவரை விலையாகக் கொடுத்த பிறகும், இந்த எலும் புருக்கி நோயிலிருந்து விடுபடமுடியாமல் தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பது எவ்வளவு கேவலமானதென்று எண்ணிப் பாருங்கள்.

இன்றைக்கு எத்தனை கிறிஸ்தவ ஸ்தாபனங்கள், இக்கொ டிய குணத்தால் சீரழிந்து கொண்டிருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் தான் எப்படியோ போகட் டும் என்றால், இது சபையையும் விட்டு வைக்கவில்லை. சத்தியத் திற்குத் தூணும் ஆதாரமுமாக இருக்க வேண்டிய சபைகள், பொறாமை குணத்தால், சாத்தானின் கைக்கூலிகளாக செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. யாக்கோபின் குமாரர்களை வாய் கூசாமல் குற்றம் சுமத்தும் கிறிஸ்தவ சமுதாயமே! நாம் எப் பொழுது இதிலிருந்து விடுபடப்போகிறோம்? இன்னும் எத்தனை காலம்? யோசேப்பைக் குழியில் தள்ளி அதற்கு அவர்கள் சமாதி கட்டியிருக்கும் போது, தேவனுடைய பிள்ளைகளென்று நம்மை அழைத்துக்கொள்ள விரும்பும் நாம், இயேசுவைச் சிலுவையில் அறையக் கொடுத்த பின்னரும் அக்குணத்தை உடும்புப் பிடியாய் பிடித்துக்கொண்டிருப்பது, நியாயமாகுமா?

இக்குணத்திற்கு, இப்பொழுதே விடை கொடுக்காவிட்டால், தேவன் வாசம் செய்யும் பரலோகம் நமக்கு சற்றும் சம்பந்தமில்ல ாத இடமாக மாறிவிடும். ஆகவே, பொறாமை குணத்திலிருந்து உடனடியாக விடுதலை பெறுவோம்.

## III அவர்களின் சகோதர சிநேகம் சோதிக்கப்பட்டது

யோசேப்பு, தன் சகோதரர்களைத் தான் இருக்கும் எகிப்தில் ஏற்றுக்கொள்வதற்குமுன், மூன்றாவதாக, அவர்களின் ஒற்றுமை யை, சகோதர சிநேகத்தை சோதித்தான்.

முதல் இரண்டு சோதனையில் அவர்கள் அபார வெற்றி பெற்றிருந்தாலும், இதுவும் அவர்களுக்கு அவசியம் என்று கருதி சோதிக்கிறான். ஆம், இரண்டாம் தரம் அவர்கள் திரும்பிச் சென்ற போது, அவனவன் பையிலே அவனவன் பணத்தையும் பென் யமீன் பையிலே பணத்தோடு, யோசேப்பின் வெள்ளிப் பான பாத்திரத்தையும் போட்டுவிடும்படி வேலைக்காரர்களுக்குக் கட்டளை கொடுத்தான் (44:1,2) பிறகு, அவர்கள் புறப்பட்டு வெகுதூரம் போவதற்கு முன்பாக, விரட்டிச் சென்று, ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று அவர்களை பார்த்துக் கேட்கும்படி செய்தான். இருதயத்தைக் கொஞ்சம் கூட இளக்காமல், அவர்கள் மீது திருட்டுப்பட்டம் சுமத்துகிறான். பிறகு நடந்த தேடுதல் வேட்டையில் அந்த வெள்ளிப்பாத்திரம், பென்யமீன் சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டபோது, என்னசெய்வதென்று தெரியாமல் ஆளாளுக்குத் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டார்கள் (44:13).

பிறகு, யோசேப்புக்கு முன்பாக, அவர்கள் நிறுத்தப் பட்ட போது, என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப் பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார், பாத்திரத்தை வைத்திருக்கிறவனும், நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமை கள் என்றனர் (44:16) அதற்கு யோசேப்பு, இல்லையில்லை, அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக, எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ அவனே எனக்கு அடிமை, நீங்களோ சமாதானத்தோடு உங்கள் தகப்பனிடத்திற்கு போங்கள் என்றான் (44:17) அப்பொழுது உத்தரவாதியாகிய யூதா, ஒரு வார்த்தை சொல்லுகிறேன் என்று ஆரம்பித்து, ஒரு குட்டிப் பிரசங்கத்தையே செய்து, பென்ய மீனுக்குப் பதில் நானே அடிமையாயிருக்கிறேன் என்று சொல்லி, இறுதியில், இளைய வனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்திற்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்.

அதற்கு மேல் தன்னை அடக்கிக் கொள்ள முடியாத யோசேப்பு, எல்லோரையும் வெளியே போகச் சொல்லி, சத்த மிட்டு அழுது, தன்னை தன் சகோதரர்களுக்கு வெளிப்படுத்தி னான். அங்கே யோசேப்பின் அழுகை, ஓர் அபாயக்குரல் அல்ல. அது, அங்கீகார தொனி, அப்பொழுதிலிருந்து அவர்களை, எகிப் தில் குடியேறுவதற்கான பணி ஏக தடபுடலாக நடந்தது.

எல்லோருமாக சேர்ந்து தன்னைக் குழியில் தள்ளியது போல், தன் தாயின் இன்னொரு குமாரனாகிய பென்யமீனை, இது தான் சாக்கு என்று சொல்லி, தாங்கள் தப்பித்தால் போது மென்று ஓடப்பார்க்கிறார்களா அல்லது இவனுக்காகப் பிரயாசை எடுக்கப் போகிறார்களா என்று சோதித்தான். இச்சோதனையிலும் அவர்கள் மகத்தான வெற்றி பெற்றார்கள். பென்யமீனுக்காக நாங்கள் எல்லோரும் அடிமைகள் என்றார்கள். அப்பொழுது, எப்படியிருந்திருக்கும் யோசேப்புக்கு? ஈவிரக்கமில்லாமல்,

தன்னை அடிமையாக ஒரு காலத்தில் விற்ற இவர்களா இவனுக் காக அடிமைகளாக இருக்க முன் வருகிறார்கள் என்று தன் கண்க ளைத் தானே நம்பமுடியாமல் ஏற இறங்கப் பார்த்திருப்பான், அப்படித்தானே. எப்படியோ, தான் இருக்கும் எகிப்தில் குடியேற அவர்களுக்கு சகோதர சிநேகம் அவசியம் என்று நினைத்தான். சோதித்தான். பிறகு சோதனைகளின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடிவு செய்தான்.

எனதருமை சகோதரனே, சகோதரியே, ஒரு சாதாரண தேச மாகிய எகிப்துக்குள் அடியெடுத்து வைப்பதற்கே, சகோதர சிநேகம் அவசியமானால், சராசரி மனிதனாகிய யோசேப்பு இருக் கும் இடத்தில் குடியேறவே சகோதர சிநேகம் அவசியமானால், நித்திய நாடாகிய பரலோகத்தில் பிரவேசிக்க, பரிசுத்தமும், நீதி யும் நிறைந்த சர்வ வல்லவர் இருக்கும் நகரத்தில், நித்திய கால மாய் வாழ்வதற்கும், சகோதர சிநேகத்தில் எந்தளவு சிறந்து விளங்க வேண்டு மென்று எண்ணிப் பாருங்களேன்.

சகோதர அன்பு கிறிஸ்தவர்களுக்குள்ளாக இருக்குமானால், கிறிஸ்துவின் சபைகளில் ஒருபோதும் பிரச்சனையே எழாது. பிரச்சனைகள் இல்லாத பட்சத்தில், சபைகள் ஆவியிலும், எண் ணிக்கையிலும் வெகுவாக வளர்ந்து, அவைகள் இருக்குமிடங் களில் தேவனுக்கு மகிமை சேர்க்கும். ஆகையால், நம்முடைய தேவனால், போதிக்கப்பட்டபடி (1தெச. 4:9) நம்முடைய தேவ னால் கட்டளையிட்டபடி (ரோமர் 12:10) சகோதர சிநேகத்திலே நிலைத்திருந்து (எபி. 13:1) பரம கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெறுவோம்.

இப்பொழுது நாம் பார்த்தபடி, உண்மையும், பொறாமை அற்ற தன்மையும், சகோதர சிநேகமும் மாத்திரம் இருந்தால் போதும், பரலோகம் போய்விட முடியுமென்று நான் சொல்வதாக நினைத்துக்கொள்ளாதீர்கள். அப்படியில்லை, யோசேப்பு, அவர் களிடம் அத்தவறுகளைக் கண்டதால், அவைகளிலிருந்து அவர் கள் விடுபட்டிருக்கிறார்களா என்று சோதித்தான். ஆம், என்று ஊர்ஜிதமான போதே, தான் இருக்குமிடத்தில் அவர்களையும் ஏற்றுக்கொண்டான்.

அதுபோலத்தான், நம்முடைய பாவங்கள் அனைத்தையும் கண்டறியும் தேவன், அவைகளிலிருந்து நாம் விடுதலையாகி யிருக்கிறோமா என்று நம்மை சோதித்து, விடுதலையாகி இருந் தால், அவர் இருக்குமிடத்தில் நம்மைச் சேர்த்துக்கொள்வார். ஆகையால், வேதம் விவரிக்கும் எல்லாக் குணங்களிலும் தேறி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாக மாறி, நம்முடைய தேவன் வாசம் செய்யும் பரலோகம் சென்றடைய சகலவித முயற்சிகளையும் எடுப்போம்.

ஒப்பிடமுடியாத அப்பாக்கியத்தைப் பெற, பரலோகத்தின் தேவன் நமக்கு அனக்கிரகம் செய்வாராக! ஆமென்!

**E.Z.S. இராஜநாயகம்**

ஜெபியுங்கள் !                                                    பங்கு பெறுங்கள் !!

# பதிமூன்றாம் வேனிற்கால வேதாகம முகாம்
## மற்றும்
## "திருமறை தியானம்" நேயர்கள் &
## "திருமறை ஆசான்" வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 3,4,5, - 2010 (திங், செவ், புதன்)**

*சிறப்பம்சங்கள்*

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. **100 /-** சிறியவர்கள் ரூ. **50 /-**

**கிறிஸ்துவின் சபை**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230603 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# உங்களால் என்ன செய்ய முடியும்?

அநேக சகோதரர்கள் ஆராதனை உற்சாகமாக இல்லை என்று சொல்வதை நாம் அடிக்கடி கேட்கிறோம். சிலர் சபையின் மற்ற அங்கத்தினர்களால் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக உணர்கிறார்கள்; இன்னும் சிலர் தங்களை யாரும் அழைப்பதில்லை, சந்திப்பதில்லை என்றும் தங்கள் தேவைகள் யாருக்கும் தெரிவதில்லை என்றும் அங்கலாய்க்கிறார்கள்.

இன்னும் சிலர் தங்களை ஆராதனையில் ஏதாவது செய்வதற்காகவோ அல்லது சபை நடவடிக்கைகளில் பங்கு பெறுவதற்கோ யாருமே தங்களை ஒருபோதும் அழைப்பதில்லை என்று ஆச்சரியப்படுகிறார்கள். அவர்கள், தங்களை தேவையற்றவர்கள் என்று உணர்கிறார்கள் அல்லது அநேகமாக தாங்கள் தகுதியற்றவர்கள் அல்லது திறமை இல்லாதவர்கள் என்று நினைக்கிறார்கள்.

இவ்விதமாக சிந்திப்பதில் என்ன பிரச்சனை இருக்கிறது? முதலில் இவ்விதமாக சிந்தையை செலுத்துவதே தவறு. இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் ஆராதனை பொழுது போக்காகவும், உணர்ச்சிவசப்படத்தக்கதாயும் இல்லையென்றால் தங்கள் நேரம் வீணடிக்கப்படுவதாக உணர்கிறார்கள். ஆனால், ஆராதனை சம்மந்தமான வசனங்களை வாசித்துப்பாருங்கள். ஆராதிப்பவர் பொழுதுபோக்கிற்காகவோ அல்லது அவரை வசப்படுத்தும் விதத்திலோ அவருடைய அனுபவம் இருக்க வேண்டும் என்று எங்குமே இல்லை. நாம் உண்மையாக ஆராதிக்கும் போது தேவனுக்கு துதிகளைச் செலுத்தி, நன்றிகளை ஏறெடுத்து, கனப்படுத்தி நம்முடைய சிந்தையை தேவன் மீது செலுத்த வேண்டும். உண்மையாகவே, செய்முறையின் ஒரு பகுதியாக நாம் பக்தி விருத்தியடையும்படியாக வேத வசனங்களைப் படிக்க வேண்டும். இதுவும் கூட தேவனைப் பற்றி அதிகமாக கற்றுக் கொள்வதற்கும், அந்த வேத அறிவின் மூலமாக நாம் தேவ சாயலை அடையும்படியாகவும் இருக்க வேண்டும்.

மேலும், வேத அறிவும், படிப்பும் உணர்ச்சிவசப்படுவதைக் காட்டிலும் கிறிஸ்தவ ஆராதனைக்கும், வளர்ச்சிக்கும் அவசியமானது என்று தேவன் ஏன் வலியுறுத்துகிறார்? ஏனென்றால், உணர்வுகள் நிலையற்றது என்பதை தேவன் அறிந்திருக்கிறார். எத்தனை முறை ஒன்றுமே இல்லாததற்கு நம்மை நாம் உயர்த்திக் கொள்கிறோம்? அதைப்போல ஒன்றுமே இல்லாததற்கு நாம் சோர்வடைகிறோம். எத்தனை முறை ஆராதனை நமக்கு வெறுமையானது போல் தெரிகிறது, அது உணர்ச்சிவசப்படுவதில் நாம் குறை வைத்ததினாலா? தேவனுக்கு முன்பாக நாம் சரியாயிருப்பதற்கு நிச்சயமான வழிமுறை, நம்மீது சிந்தை வைக்காமல்

தேவன் மீது சிந்தை வைத்து அவரை ஆராதிப்பதுதான்; அந்த ஆராதனை ஆவியோடும், அதாவது நம் முழு இருதயத்தோடும், உண்மை யோடும் இருக்க வேண்டும். துரிதமான உணர்வுகளின் வெளிப் பாடாய் இருக்கக்கூடாது.

இன்னும் சிலர் ஆராதனை அலுப்பாயிருக்கிறது என்று சொல்வதற்கான காரணம் என்னவென்று உங்களுக்குத் தெரியு மா? இந்த ஒப்புமையை சற்று சிந்தித்துப்பாருங்கள்; ஒரு மாண வன் தன்னுடைய வாழ்நாட்கள் முழுவதும் கல்லூரி வகுப்பில் செலவழித்துவிட்டு தன்னுடைய அறிவை வாழ்க்கையின் தேவைகளை சந்திப்பதற்கு உண்டான பொருள் ஈட்டுவதற்கு பயன்படுத்தவில்லையென்றால், அவன் வாழ்க்கையில் என்ன சாதித்திருக்கிறான்? வருடந்தோறும் அதே பாடங்களை மறுபடி யும், மறுபடியும் படித்தும் அதை ஒருபோதும் பயன்படுத்தாத பட்சத்தில் அது அலுப்பாகிவிடும் அப்படித்தானே?

இப்போது, தங்கள் ஜீவிய நாட்கள் முழுவதும் வேதபாட வகுப்புகளுக்கும், பிரசங்கங்கள் கேட்பதற்கும் செலவு செய்தும் அங்கே பெற்றுக்கொண்ட அறிவை மற்றவர்களுக்கு சுவிசேஷத் தைப்போதிக்க பயன்படுத்தவில்லையென்றால் எப்படி இருக் கும்? அவர்கள் சிறு வயதிலிருந்தே கிறிஸ்தவர்களாயிருந்தா லும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஆராதனைகளில் கலந்து கொண்டிருந்தாலும், அவர்களால் மனமாற்றமடைந்த ஒரு ஆத்து மாவைக் கூட அவர்களால் சுட்டிக்காட்ட முடியாது. கற்றுக் கொண்ட பாடங்களை அவர்கள் தங்களுக்குள்ளே வைத்துக் கொண்டபடியினாலும் இப்படி பிரசங்கங்களை கேட்பவர்கள் அலுப்பாயிருக்கிறது என்று சொல்வதில் ஆச்சரியமில்லை!.

கர்த்தருடைய சபையின் உண்மைத்தன்மையானது ஒருவர் எத்தனை வாரங்கள் ஆராதனையில் கலந்து கொள்கிறார் என்ப தை வைத்து தீர்ப்பு செய்யப்படுகிறதா? ஆம், அது உண்மை தான், ஒர் அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவன் சபைகூடும் போ தெல்லாம் தானும் அங்கே இருக்க விரும்புவான், ஆனால், இது மாத்திரம் நம்முடைய வேலை அல்ல, ஆராதனையில் தேவனு டைய சமூகத்தில் வந்து அவரைத் துதிப்பதற்கும், கனப்படுத்து வதற்கும் இதை நமக்கு கிடைத்த சிலாக்கியமாக கருத வேண் டும். எனவே, நம்முடைய வேலை தேவனுக்காக கனி கொடுப்ப தாகத்தான் இருக்க வேண்டும்.

நீங்கள் ஒருவருக்கு போதித்து போதிக்கப்பட்டவரை சபையில் உங்கள் அருகாமையில் உட்காரச் செய்யும் அளவுக்கு வெற்றிப்பெற்றால், நீங்கள் தன்னிச்சையாகவே என்ன செய்கிறீர் கள் தெரியுமா? நீங்கள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறீர்கள். அதனால் தான் தேவன் உலகத்தில் சுவிசேஷம் அறிவிக்கும் வேலையை தேவ தூதர்களிடம் விடாமல் மனிதர்களிடத்தில் விட்டிருக்கிறார், ஏனென்றால், மனிதர்கள் மற்றவர்களுக்கு போதிக்கும்போது அவர்களும் படிப்பிக்கப்படுகிறார்கள். எனவே, நாம் மற்றவர்களுக்கு போதிக்கும்போது படிப்பிக்கப்

படுவோம், பலப்படுத்தப்படுவோம், சத்தியத்தில் நிலை கொண்டிருப்போம். நாம் சுவிசேஷத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாத வரை நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திலோ அல்லது ஆராதனையிலோ சோர்வு காணப்படும்.

எனவே, உங்களால் என்ன செய்ய முடியும்? யாரோ ஒருவர் உங்களை அழைப்பதற்கோ, உங்களுடைய உணர்வுகளுக்கு உதவி செய்வதற்கோ நீங்கள் ஒன்றை செய்யும்படியாக சொல்வதற்கோ நீங்கள் காத்திருக்க வேண்டாம். முதல் படியை நீங்கள் எடுத்து வையுங்கள்! பணியின் பல்வேறுப்பட்ட நிகழ்ச்சிகளைக் கவனியுங்கள். சமுதாய மற்றும் பொழுதுபோக்கு பகுதிகளைப் பார்க்க வேண்டாம். சபை ஈடுபட்டிருக்கிற பணியின் நிகழ்ச்சிகளைப் பாருங்கள். உங்கள் திறமைகள் உங்களை எதைச் செய்ய பக்குவப்படுத்துகிறதோ அதைத் தீர்மானித்து வேலை செய்ய நீங்களாகவே முன் வாருங்கள். யாரோ ஒருவர் உங்களிடம் வந்து உதவியை கெஞ்சி கேட்கும் வரை காத்திருக்க வேண்டாம். நீங்கள் கர்த்தருக்குள் இந்த காரியங்களைச் செய்ய தேடுவதினாலும், அதன்படி செய்வதினாலும் வளர்ச்சி நோக்கிய வாழ்க்கையை வாழ முடியும்.

உங்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்களா? நிச்சயமாகவே உங்களுக்கு இருப்பார்கள்; ஆனால், உண்மையாகவே அவர்களோடு சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள முயற்சி செய்திருக்கிறீர்களா? உங்களோடு ஆராதனையில் கலந்து கொள்வதற்கு அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறீர்களா? உங்களுடைய வீட்டிலோ அல்லது அவர்களுடைய வீட்டிலோ வேதபாட வகுப்பு நடத்த முயற்சி செய்திருக்கிறீர்களா? அஞ்சல் வழியில் பாடங்களைப் படிக்க அவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறீர்களா? அல்லது வேறு இலக்கியங்களை அவர்களோடு பகிர்ந்தளித்திருக்கிறீர்களா?

உங்கள் பிராந்திய சபையில் உள்ள அங்கத்தினரோடு சேர்ந்து பலவீனமாயிருக்கிற சபைக்கு சென்று அங்கே உள்ள பிராந்திய சபையாரோடு சேர்ந்து கதவைத் தட்டுகிற பிரச்சாரத்தில் ஈடுபட்டு வீட்டு வேதபாட வகுப்புகளுக்கு யாரையாவது அழைத்திருக்கிறீர்களா? சபையில் யாருமே இதுபோன்ற செயல்பாடுகளில் ஈடுபடாவிட்டாலும் கூட ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளியே சென்று ஒரு குறிப்பிட்ட தெருவில் மதசம்மந்தமான மக்கள் தொகை கணக்கெடுத்து, பக்தி சம்மந்தமான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுப்பவர்களை கண்டுபிடித்து விருப்பமுள்ளவர்களை வேதபாடத்திற்கு சேர்த்துக்கொள்ளலாம். அவர்களிடம் ஓர் அட்டையைக் கொடுத்து தொலைக்காட்சியில் இடம் பெறும் நிகழ்ச்சிகளையும், வானொலியில் ஒலி பரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளையும், சபையின் ஆராதனை நேரங்களையும், பிராந்திய சபையினால் செய்யப்படும் மற்ற சமுதாய சேவைகளையும் அதில் எழுதிக்கொடுக்கலாம்.

அதன்பின்பு விருப்பமுள்ளவர்கள் வீட்டிற்கு சென்று வேத பாட வகுப்புகளை நடத்துங்கள் அல்லது குறைந்தபட்சம் பிரசங்கியாரோடு அல்லது மூப்பர்களோடு அல்லது வகுப்பு நடத்துபவரோடு கூட செல்லுங்கள். வருங்காலத்தில் மற்றவர் களுக்கு தலைமைத்துவத்தை அளிக்கும் வகையில் நீங்கள் நன்றாக பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்கள் வேத வசனங்களை நன்கு அறிந்தவர்களாகவும், மற்றவர்களுக்கு போதிக்க ஆயத்தமாகவும் இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட இல்ல அழைப்புகளினால், நீங்கள் மார்மன் சபையைச் சார்ந்தவர் என்றோ அல்லது யெகோவா சாட்சிகள் சபையைச் சார்ந்தவரென்றோ தவறாகப் புரிந்து கொள்ளப் படுவீர்கள். ஏனென்றால், அவர்கள் தான் கடந்த அநேக வருடங் களாக வெளியில் சென்று சுறுசுறுப்பாக வல்லமையாக போதித் துக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் எங்கே போயிருக்கிறார்கள்? அவர்கள் கலையரங்கத்தில் பார்வையாளர்கள் வருகைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் சுவிசேஷம் அறிவிப்பது உற்சாகமாக நடப்பதில்லை.

திருமறை ஆசான் மாத இதழை 10 பிரதிகள் ஆர்டர் செய்து பிரதிகளை மருத்துவமனைகளில் காத்திருக்கும் அறைகளில், இன்னும் வேறு வியாபார ஸ்தலங்களில் வையுங்கள். அங்கே காத்திருக்கும் அறைகளில் யெகோவா சாட்சிகள் விட்டுக் சென்ற புத்தகங்களை நீங்கள் கண்டுபிடிக்க முடியும். அவர்கள் நீண்ட நாட்களாகவே இயக்கத்தின் மூலமாகத் தங்கள் செய்தியை பரப்புவதன் மதிப்பை உணர்ந்துவிட்டார்கள், அதே நேரத்தில் நாம் அச்சடிக்கப்பட்ட பக்கங்களின் மதிப்பை உணராதிருக் கிறோம். நாம் விதைக்கவில்லையென்றால் அறுக்க முடியாது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அஞ்சல் வழி வேதாகமக் கல்வியில் வேத வசனங்களைப் பற்றி அதிகமாக கற்றுக்கொள்ளுவீர்கள், கிறிஸ்தவனாக இருந்து கொண்டு மற்றவர்களிடம் நீ கற்றவைகளை பகிர்ந்து கொள்ளும் போது பத்து வருடங்களாக நீங்கள் உங்களுக்குத்தானே கற்றுக் கொண்ட காரியங்களைக் காட்டிலும் அதிகமாக, கற்றுக் கொள்வீர்கள். அதை முயற்சி செய்துப்பாருங்கள்! சுவிசேஷத்தில் உங்களுக்கு இருக்கின்ற விருப்பம் அபரிதமாக அதிகரிக்கப் படுவதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுவது மாத்திரமல்லாமல் சுவிசேஷத்தை மற்றவர் களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற ஆசையின் மூலமாக சத்தியத்தை கற்றுக்கொண்ட ஆத்து மாக்களுக்காக ஒவ்வொரு இரவும் நன்றி சொல்லிக்கொண்டு படுக்கைக்கு செல்வீர்கள்.

**BENNY MARTIN** **J.C. CHOATE**

பெண்கள் பகுதி

# வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை

இன்றைய காலத்திற்கும் இன்றைய நடைமுறைக்கும் ஏற்ற சரியான ஆலோசனையை ஞானி சாலமோன் வெகுகாலத்திற்கு முன்பே மிகத் துல்லியமாக எழுதி வைத்துள்ளான். "நீ உன் வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. தீங்கு நாட்கள் வராத தற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல் லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவை களல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராத தற்கு முன்னும்" என்று பிரசங்கியில் (பிரசங்கி 12:1) பார்க்கி றோம். இளம் உள்ளங்கள் தங்கள் வாழ்க்கையில் பெரிய போராட் டங்களை சந்தித்துக் கொண்டுள்ளனர். அநேக இரைச்சல்கள் அவர்கள் மன தின் கவனத்தை திசைமாற்றிக் கொண்டி ருக்கின் றன. பலவிதமான சக்திகள் அவர்களை துன்மார்க்கமான உலகத் திற்குள் அமிழ்த்திக் கொண்டுள்ளது. புத்தியுள்ள வாலிபப் பிள்ளைகள் வேதத்திற்கு தங்கள் செவியை சாய்க்கின்றார்கள். புத்தி கெட்ட இளம் மக்களோ விலை மதிக்க முடியாத பொக்கி ஷம் என்னும் வேத அறிவுரையை கேட்க மனதில்லாமல் மிக வேகமாக அழிவுக்குச் செல்லும் பாதையில் பயணம் செய்து கொண் டுள்ளனர். ஞானியின் காலத்திற்குச் சென்று அவர் அறிவுரைக்கு செவி கொடுப்பது இன்றைய வாலி பர்களுக்கு எவ்வளவு அத்தி யாவசியமானதன்றோ!

"ஏன் வாலிப பிராயத்திலே சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்?"

பிரசங்கி 12:1-ல் கூறப்பட்ட "வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" என்பது ஒரு கட்டளையாகும். இது ஆவியா னவராலே வெளிப்படுத்தப்பட்ட ஒன்று. இதை புறக்கணிப்ப தென்பது பிதாவாகிய தேவனின் கட்டளைகளில் ஒன்றைப் புறக் கணிப்பதற்குச் சமம். எப்படி தேவன் நோவாவிடம் ஒரு பேழை யை கட்டு என்று சொன்னாரோ, ஆபிரகாமை ஊர் என்கிற கல்தே யர் நாட்டிலிருந்து வா என்று அழைத்தாரோ, யோனாவை நினி வேக்கு போய் பிரசங்கி என்று கூறினாரோ. அதே போன்று "உன் சிருஷ்டிகரை வாலிபத்திலே நினை" என்பதும் ஒரு கட்டளையே. வேதத்திலுள்ள சில கட்டளைகள் வாழ்க்கையில் எல்லா கால கட்டங்களுக்கும் பொருந்துகிறதாக உள்ளது. ஆனால், சில கட்ட ளைகள் அப்படியல்ல. எபேசியர் 6:4ல் உள்ள ஆலோசனை ஒரு வன் பெற்றோராக மாறும் வரை அதற்கு கீழ்ப்படிய முடியாது.

எபேசியர் 6:4ல் உள்ள கட்டளை ஒரு பையனுக்கோ, அல்லது திருமணமே ஆகாத ஒருவருக்கோ பொருந்தாது. ஆனால், பிரசங்கி 12:1-ல் உள்ள ஆலோசனை பிரத்தியட்சமாக வாலிபர்களுக்கு மட்டும் தான் பொருத்தமாக கூறப்பட்டுள்ளது. அவைகளை அவன் தன் அந்திய காலத்தில் கடைபிடிக்க முடியாது.

**II.** வாலிபப் பிராயத்திலே சிருஷ்டிகரை நினைக்க வேண்டும். ஏனென்றால், இதுவே ஒருவருடைய வாழ்க்கையில் நல்ல நாட்களாகும். சங்கீதக்காரன் கூறும்போது மனுஷனுடைய நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் (சங். 90:10) என்கிறான். வயதானவர்கள் மரிக்கிறார்கள் வாலிபர்களும் மரிக்கிறார்கள் சற்றும் எதிர்பாராத வகையில் விபத்துக்களில் சிக்கி வாலிபர்கள் மரிப்பதை நாம் பார்க்கிறோம். எபிரெய ஆசிரியர் அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எபிரெயர் 9:27) யாக்கோபு ஆசிரியர் நாளைக்கு நடப்பது உங்களுக்கு தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந் தோன்றி பின் தோன்றாமலிருக்கிற புகையைப் போலிருக்கிறதே" (யாக்கோபு. 4:14) என்று கூறுகிறார். இளம் மக்களின் வாழ்க்கையும் புகையைப் போன்றே உள்ளது. தேவனை தேடுவதற்கு சரியான தருணம் வாலிபப் பிராயமே தவிர வேறு தருணம் இல்லை. வயதான பின்பு நினைத்துக் கொள் வேன் என்று நீ திட்டமிட்டால் அது எவ்வளவு பரிதாபமான நிலை தெரியுமா?.

**III.** வாலிபப் பிராயத்திலே நீ அவரை நினைக்க வேண்டும். ஏனென்றால், உன்னுடைய நம்பிக்கைக்கு அவர் பாத்திரமானவர். சுயநலமுள்ள சாத்தான் வாலிபர்களை அழிவுக்கு கொண்டு செல்வதில் மிகவும் நாட்டமுள்ளவனாக இருக்கிறான். அவர்களின் சரீரம், ஆவி, ஆத்துமா இப்படி எல்லாவற்றையும் நாசப்படுத்துகிறான். தற்காலிகமாக இன்பத்தைக் காட்டி தந்திரமாக அவர்களை நிரந்தர சோதனைக்கு அனுப்புகிறான்.

தேவன் வாலிபப் பிள்ளைகளை சிருஷ்டித்து, பரத்திலிருந்து எல்லா நன்மைகளையும், கிருபைகளையும் ஏராளமாய் பொழிந்து கொண்டிருக்கிறார். தேவனும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் இந்த இளம் உள்ளங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று ஆவலாய் உள்ளனர். எனவே வாலிபர்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள அவர் பாத்திரமுள்ளவராயிருக்கிறார்.

**IV.** நான்காவது, நீ ஏன் வாலிப பிராயத்திலே உன் தேவனை நினைக்க வேண்டுமென்றால், இயேசு கிறிஸ்து உண்மையாகவே உன் வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறாரா என்பதை உன் தேழிகள் கவனிக்கிறார்கள். அவர்கள் விசுவாசிக்கிற வேத வசனங்கள் ஒருவேளை நீயாக இருக்கலாம்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதினபோது, "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள் தானே" (2கொரிந்தியர் 3:2) என்கிறார். நம்மைச் சுற்றிலும் இருக்கிற மக்கள் நம்முடைய வாழ்க்கை முறைகளை நன்கு கவனித்துப் படித்துக் கொண்டுள்ளனர்.

நம் வாழ்க்கையின் மூலம் சுவிசேஷமானது எப்படி மற்ற வர்களால் வாசிக்கப்படும்? பிறர் நம் வாழ்க்கையை கூர்ந்து கவனிப்பதால் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை வலியுறுத் தும் வகையில் பவுல் அடிகளார் இளைஞர்களாகிய தீமோத்தேய வுக்கும், தீத்துவுக்கும் எழுதும்போது, உன் இளமையை குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையி லும், நடத்தையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாய் இரு (1தீமோ 4:12) என் கிறார். ஆத்தும ஆதாயப் பணியில் முதியோரைக் காட்டிலும் வாலிபர்கள் அதிக உற்சாகத்தோடு அதிக எண்ணிக்கையில் சாதனை படைக்க முடியும்.

V. வாலிபப் பிராயத்திலே தேவனை நினைக்க வேண்டும். ஏனென்றால், அவர் உன்னை வாலிபத்திலே நினைத்திருக்கிறார். இமைப்பொழுது நேரம் கூட அவர் நம்மை மறந்து விடுவதில் லை. நீ ஒருவேளை அவரிடமிருந்து உன்னை ஒளித்து, அவருக்கு விரோதமாகச் சென்று கொண்டிருக்கலாம். ஆனால், அவர் கிருபையும், அன்புமுள்ளவராய் உன்மேல் இரங்குகிறவராயி ருக்கிறார். பதிலுக்குப் பதில் செய்யும் முறையிலாவது நீ உன் சிருஷ்டிகரை வாலிபத்திலே நினைக்க வேண்டும்.

VI. பிதாவாகிய தேவன் வாலிபர்களால் நினைக்கப்பட வேண்டும். ஏனென்றால், உனக்கும் கூட இராஜ்யத்தின் பொறுப்பு கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவருடைய இராஜ்யமாகிய சபை யில் நீயும் அங்கமாக இருந்து செயல்பட வேண்டுமென்று ஒவ்வொரு வாலிபப் பிள்ளையிடமும் அவர் எதிர்பார்க்கிறார். தேவனுடைய பிரதான கட்டளை (மத். 28:18-20: மாற்கு 16:15-16 : லூக்கா 24;46-49) வாலிபர்களுக்குப் பொருத்தமானவை களாக உள்ளன. விழுந்து கொண்டிருக்கிற சமுதாயத்தை பாதுகாத்து எடுத்து நிறுத்த இன்றைய கிறிஸ்தவ வாலிபர்களின் உதவிக்கரம் தேவையாய் உள்ளது. வாலிபர்களின் தூய்மையான, நல்ல பக்தி யான வாழ்க்கையானது மற்றவர்களும் இயேசு வண்டை ஓடிவர ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

(தொடரும்)

ரேச்சல் இராஜநாயகம்

வாலிபர் பகுதி

# இயேசு நம்முடைய நல்ல நண்பர்

**வா**லிபர்களாகிய உங்களுக்கு உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாதந்தோறும் மறக்காமல் உங்களை வாலிபர் பகுதியின் மூலமாக சந்திப்பதில் சலிக்காமல் சந்தோஷப்படுகிறேன். பரீட்சை காய்ச்சலில் இருந்து விடுபட்டு விடுமுறையை விடுதலையாக கொண்டாடும் வேளை வந்து விட்டது. பொதுவாகவே, வாலிபர்களாகிய நீங்கள் நட்பு வட்டாரத்தை அதிகமாக விரும்புவீர்கள். நல்ல நண்பன் உங்கள் வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவீர்கள். அப்படி ஒரு நண்பன் கிடைப்பான் என்று சொன்னால் என்ன விலை கொடுக்கவும், எதை வேண்டுமானாலும் இழக்க நீங்கள் தயாராக இருப்பீர்கள். இன்றைய நாட்களில் நட்பு என்பதற்கு வாலிபர்கள் கொடுக்கும் அர்த்தம் வேறு. அதாவது நல்ல நண்பன் என்பவன் தன்னோடு சினிமா பார்க்க வர வேண்டும், தன்னோடு கெட்ட பழக்கங்களில் ஈடுபட வேண்டும் என்று அநேக வாலிபர்கள் நினைக்கின்றனர். இன்று நிலைமை என்னவென்றால் நாம் யாரையெல்லாம் நல்ல நண்பர்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் நம்முடைய நெருக்கடியான நேரங்களில் நம்மை விட்டு பிரிந்து சென்று விடுகிறார்கள் அல்லது நம்மோடு நட்பு வைத்துக் கொண்டே உதவி செய்ய மறுக்கிறார்கள். இது போன்ற வேளைகளில் வேதனையின் காரணமாக நம் உள்ளம் உடைந்து போகிறது. எனவே தான் நம்மீது அக்கறை கொண்டு உண்மையான அன்பு செலுத்தி நமக்காக உயிரையேக் கொடுத்த இயேசுவை நம்முடைய நண்பராக்கிக் கொள்ள வேண்டும். அவர் எந்த சூழ்நிலையிலும் நம்மைக் கைவிடவே மாட்டார். அவர் நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர். இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை தேவனுடைய வார்த்தையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். சரி, இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை பல விதங்களில் நாம் பார்க்கலாம்.

## I. அவர் மரித்தோரிலிருந்து எழுந்து, இப்பொழுது எல்லாவற்றிற்கும் தலைவராக இருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக வாழ்ந்து பாடுபட்டு, இரத்தம் சிந்தி மரித்தார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், கிறிஸ்தவம் இயேசுவின் கல்லறையில் முடிவதில்லை ! இதுதான் கிறிஸ்தவத்தை மற்ற உலக மதங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. கிறிஸ்தவர்கள் மரித்த ஒரு தலைவருக்கு சேவை செய்வதில்லை. இயேசுவின் சீசர்கள்

இயேசுவின் கல்லறைக்கு வந்து அது காலியாக இருப்பதைக் கண்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள், அதன் பின்பு தான் இரண்டு தேவதூதர்கள் அவர்களிடம் உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார் என்றார்கள் (லூக்கா 24:5,6). ரோமர் 1:5 யை வாசிக்கும் போது இயேசு கிறிஸ்து தேவசுதன் என்று பலமாக நிரூபிக்கப்பட்டார். எப்படி நிரூபிக்கப்பட்டார்? மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததினால். இயேசுவின் உயிர்த்தெழுதல் தான் கிறிஸ்தவ வாழ்க்கையின் அஸ்திபாரமாயிருக்கிறது. பேதுரு 1:3,4 வசனங்களை நாம் வாசிக்கும் போது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

வாலிபர்களே ! அந்த ஜீவனுள்ள நம்பிக்கையைப்பற்றி தேவன் என்ன கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள். அது அழியாத, மாசற்ற, வாடாத சுதந்திரமாக இருக்கிறது என்கிறார் தேவன். அந்த சுதந்திரம் நமக்கு பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது! அந்த ஜீவனுள்ள நம்பிக்கை நமக்கு இருக்கிறபடியால் நாம் அவருக்கு எவ்வளவு நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டும். இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததினால் நமக்கிருக்கும் ஜீவனுள்ள நம்பிக்கை நிச்சயமாகவே மகா பெரியது.

## II. இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு முக்கியமான ஒன்றாகும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நித்தியஜீவன் நம்பிக்கையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கை எவ்வளவு உறுதியானது பாருங்கள் ! தேவன் அதை நமக்கு வாக்காக கொடுத்திருக்கிறார். அவர் பொய்யுரையாத தேவன். எபிரெயர் 6:18,19 வசனங்களில் அந்த நம்பிக்கை நம் ஆத்தும நங்கூரமாயி ருக்கிறது. அந்த நங்கூரமான நம்பிக்கை உறுதியும், நிலையமான தாக இருக்கிறது. அது மாத்திரமல்ல, அது திரைக்குள்ளாக போகிறதாக இருக்கிறது. ஒரு கப்பலுக்கு நங்கூரம் ஏன் தேவைப் படுகிறது என்பதை சிந்தியுங்கள். கடல் அபாயமோ, புயலோ வந்தாலும் கூட நங்கூரம் பாய்ச்சியிருந்தால் கப்பல் நிலையாக இருக்கும். வாலிபர்களாக இருக்கும் நாம் இவ்வாழ்க்கையில் சோதனை என்ற புயலை சந்திப்போம். ஆனால், நமக்கு நிலை யான, உறுதியான ஒரு நங்கூரமிருக்கிறது. அந்த நங்கூரம் நமது நம்பிக்கையே. நாம் அந்த நம்பிக்கையை பற்றிக் கொண்டு இவ்வாழ்க்கையில் சோதனைகளை கடந்து வர வேண்டும். நாம் நிலை தவறாமல் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

எபிரெயர் 2:14,15 வசனங்களில் நாம் பார்க்கும் போது இயேசு நமது மரணத்தின் மூலமாக, மரணத்தின் அதிகாரியான பிசாசுக்கு மிகப்பெரிய அடியைக்கொடுத்தான். அதோடு, ஜீவ காலமெல்லாம் மரண பயத்திலிருந்த நம்மையும் அவர் விடுதலையாக்கி அந்த பயத்தை நீக்கியிருக்கிறார். நாம் எப்படி மாம்சமும், இரத்தமும் உடையவர்களாக இருக்கிறோமோ அப்படியே இயேசுவும் மாம்சமும், இரத்தமுடையவரானார். ஆனால் இயேசு மரணத்தை ஜெயித்தார். நாமும் அப்படி மரணத்தை ஜெயிப்போம் என்று அவர் வாக்குக் கொடுத்ததன் மூலம், நம்மை மரணபயம் என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி இருக்கிறார். ஆகையால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாவு எனக்கு ஆதாயம், பிரிந்து கிறிஸ்துவோடிருப்பது எவ்வளவு மேலானது என்று தைரியாக கூற முடியும், (பிலிப் 1:21-23) கொரிந்தியர் பதினைந்தாம் அதிகாரம் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததைப் பற்றியும், நாமும் அப்படி எழுப்பப்படுவோம் என்பது பற்றியும் பேசுகிறது. இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களின் படி மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின் படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். நமது இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு இவைகளை நமக்காக அன்போடு செய்ததின் மூலம், நாம் பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் ஜெயம் கொள்ளுகிறோம். இதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

வாலிபர்களே, நாம் இதுகாறும் வேதவசனங்களின் வெளிச்சத்தில் இயேசு கிறிஸ்து எப்படி நம்முடைய சிறந்த நண்பராயிருக்கிறார், அவர் நமக்காக எப்படிப்பட்ட பாடுகளைப் பட்டிருக்கிறார் என்று பார்த்தோம். இயேசு நம்முடைய நண்ப ராவதற்கு எத்தனையோ தியாகங்களை செய்திருக்கிறார். இப்போது இயேசுவை நம்முடைய சிறந்த நண்பராக்கிக் கொள்ள நீங்கள் ஆயத்தமாகி இயேசு நம்முடைய நண்பராக இருக்கும் போது நம்முடைய வேலைகளை நாம் சுமக்க வேண்டியதில்லை. கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடலாம். ஏனென்றால், அவர் நம்மை விசாரிக்கிறவர். இயேசுவைப் போல ஒரு சிறந்த நண்பரை நாம் எப்போதுமே பெற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், அவர் நமக்காக நம்முடைய ஜீவனை யேக் கொடுத்து அன்பு செலுத்தியிருக்கிறார். இயேசுவுக்கு நண்ப ராக இருக்க நாம் பெரிதாக ஒன்றையும் செய்ய வேண்டிய தில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவருடைய கற்பனை களை கைக்கொள்ளுவதுதான். அப்படிக் கைக்கொள்ள நம்மை ஒப்புக்கொடுப்போம்!.


**பென்னி மார்ட்டின்**



# விதைக்கிறவன் உவமை

சிறுவர் பகுதி

அன்பும், பாசமும் உள்ளத்தே கொண்ட கர்த்தரால் கிடைக்கப்பெற்ற ஈவுகளே! முழு ஆண்டு தேர்வு எழுதி விடுமுறையில் இருக்கும் உங்களுக்கு வாழ்த்துக்கள். இம்மாதம் நான்காவது நிலமாகிய **"நல்ல இடத்தில் விதைக்கப்பட்ட விதை"** பற்றி படிப்போம். வாருங்கள்.



இயேசு கிறிஸ்துவே இதை நல்ல நிலமென்று சொல்லியிருக்கும்போது நாம் இதை மிகவும் கவனமாக கவனித்து என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். **"லூக்கா *8:15* நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும், நன்மையுமான இருதயத்திலே காத்துக் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்".**

இவ்வகை நிலத்தை சார்ந்தவர்களும் வசனத்தைக் கேட்கிறார்கள். முதலாவது இயேசு இதை விவரிக்கும்போது "உண்மையும்" என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார். மூல பாஷையிலே இந்த வார்த்தைக்கான பொருள் ஆவிக்குரிய உயர்நிலை, மிகச்சிறந்த ஒழுக்கம் என்பதாகும்.

இரண்டாவதாக நன்மையான இருதயம் என்று சொல்கிறார். தீமையான எண்ணங்கள் குடிகொள்வதை தவிர்க்கும் இதயம் என்பது இதன் பொருள்.

மூன்றாவதாக மாற்கு 4:20ல் பார்க்கும்போது தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளும் இருதயம் என்று இயேசு சொல்கிறார்.

நான்காவதாக, மத். 13:23 ல் வசனத்தைக் கேட்டு உணருகிறவன் என்று இந்த வகை மனிதர்களை இயேசு கிறிஸ்து விவரிக்கிறார்.

**ஐந்தாவதாக,** தேவனுடைய வார்த்தைகளை இருதயத்திலே காத்து கொள்கிறவனாயிருக்கிறான் (லூக்கா 8:15) என்று இயேசு சொல்கிறார். தேவனுடைய வசனங்களை உள்வாங்கி அதை தன்னோடு இணைத்து கொள்கிறவனாய் இருக்கிறான். தீமையான எந்த ஒரு செயலோ அல்லது யாரோ அதை தன் இருதயத்திலிருந்து எடுத்துப் போட அனுமதிக்காதவனாயிருக்கிறான்.

**ஆறாவதாக,** "பொறுமையுடனே பலன் கொடுக்கிறவனாயிருக்கிறான்".

தேவனுடைய வார்த்தையை கேட்கிறவர்களாக இல்லாமல் அதன்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டுமென்று (யாக் 1:22,25) இயேசு விரும்புகிறார். 100, 60, 30 என்று பலன் கொடுப்பார்கள் என்று இயேசு சொல்கிறார்.

எனக்கன்பான, தம்பி, தங்கைகளே தேவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான திறமைகளையும், சந்தர்ப்பங்களையும் கொடுத்துள்ளார். நல்ல நிலத்தைப் போன்று நல்ல இதயத்துடன் நாம் இருக்கும் போது அதிக கனிகளைக் கொடுப்போம். இச்சிறுவயதிலிருந்தே உண்மையும், நன்மையுமான இருதயத்தை பெற்றுக் கொள்ள முயற்சி செய்வோம். பரலோகத்தின் தேவன் அதற்கு உதவி செய்வராக!.

**R. ஏபில் ரோஜர் நாயகம்**

## ஞானஸ்நானத்தில் என்னவெல்லாம் நடக்கிறது

1. *நாம் இயேசு கிறஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறோம் (மத்தேயு 3:15)*
2. *நாம் பாவ மன்னிப்பைப் பெறுகிறோம் (அப். 2:38)*
3. *நாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம் (அப். 10:48)*
4. *நாம் புதுசிருஷ்டியாகிறோம் (2கொரி 5:17)*
5. *நாம் கிறிஸ்துவுக்குள் குழந்தையாகிறோம் (1பேதுரு 2:2)*
6. *நாம் மறுபடியும் பிறக்கிறோம் மற்றும் மனமாற்றமடைகிறோம் (யோவா 3:5; மத்தேயு 18:3)*
7. *நாம் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறோம் (கலாத்தியர் 3:27)*

## " துருவின் சாட்சி " நூலில் இருந்து

### பாடம் - 2 (சென்ற மாதத் தொடர்ச்சி)

## வேதாகமம் கொடுத்தலைப் பற்றிய புத்தகம்

### III யாக்கோபின் கொடுத்தல்

"அப்பொழுது யாக்கோபு; தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப் பண்ணு வாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்; நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக் கொண்டான்." (ஆதி. 28: 20-22).

இந்த வசனப்பகுதியில், யாக்கோபு தன் வீட்டை விட்டு கடந்து சென்ற போது, இராத்திரி வேளையிலே ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்து அங்கே இராத்தங்கி அங்கே ஒரு சொப்பனம் கண்டான். அதில் ஒரு பெரிய ஏணி, அதின் நுனிப்பகுதி வானத்தை எட்டியிருந்தது, அடிப்பகுதி பூமியிலே இருந்தது. கர்த்தர் அதற்கு மேலாக நின்று, யாக்கோபுக்கு சில வாக்குத்தத் தங்களைக் கொடுத்தார். யாக்கோபு நித்திரை தெளிந்து, விழித்து, " மெய் யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார் " என்று சொன்னான். அங்கே, யாக்கோபு மிகவும் பயந்து விட்டதாக நமக்கு சொல்லப் பட்டிருக்கிறது.

பொதுவாக ஜனங்கள் பயந்து கொள்ளும் போதும் அல்லது கலங்கும் போதும் என்ன செய்வார்களோ அதை யாக்கோபும் செய்தான். கடந்த கால ஜீவியத்தை நினைத்துப் பார்த்த போது, அந்த இரவு கடுமையான தனிமையாகிவிட்டது. அடுத்த நாள் காலையிலே யாக்கோபு தேவனிடத்தில் பொருத்தனை செய்கி றார். அந்த பொருத்தனை என்ன? யாக்கோபு இந்த பொருத்தனை யை செய்த போது ஏழையாகத் தான் இருந்தார், அதன் பின்பு யாக்கோபு தன்னுடைய ஜீவியத்தில் செல்வந்தனாக மாறினார். ஆனாலும், யாக்கோபு தேவனிடம் செய்த பொருத்தனையின்படி தசம பாகத்தை தொடர்ந்து செலுத்தி வந்தார். இதுவும் கூட மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே

தேவ மனிதர்கள் தசமபாகம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிகிறோம்.

## IV விவசாயிகளுக்கு அறிவுரைகள்

" நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும் போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக் கிடக்கிற கதிர் களைப் பொறுக்காமலும், உன் திராட்சைத் தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக் கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும், பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் " (லேவி 19:9,10).

இந்த வசனங்களிலிருந்து நாம், விவசாயி தன் வயலின் ஓரத்திலிருக்கிறதை ஏழைகளுக்கும், பரதேசிகளுக்கும் விட்டு விட வேண்டியதாயிருந்தது என்று கற்றுக்கொள்கிறோம். மேலும் அறுவடை காலத்தின் போது நாம் ஒரு யூதனுடைய வயல் வழி யாய்ச் சென்று அதன் மூலை முடுக்குகளைப் பார்த்து அவன் ஒரு கஞ்சத்தனமானவனா அல்லது உதார குணம் உடையவனா? என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவன் மூலை முடுக்குகளில் மிகவும் கொஞ்சமாக விட்டிருந்தால் அவன் ஒரு கஞ்சத்தனமான யூதன், மற்றும் ஓரம்பாரத்தில் இருக்கும் சில பகுதிகளை அறுவடை செய்யாமல் விட்டிருந்தால் அவன் உதார குணமுள்ள யூதன். அந்தக் காலகட்டத்தில் நம்முடைய சகோதரர்கள் சில பர் விவசாயம் செய்திருந்தால், ஒருவேளை கஞ்சி காய்ச்சு வதற்குக் கூட போதுமான அளவு தானியங்களை விட்டு வைத்திருக்கமாட்டார்கள்.

" முதல் முதல் பழுக்கும் உன் பழத்தையும், வடியும் உன் இரசத்தையும் காணிக்கையாகச் செலுத்த தாமதிக்க வேண்டாம். உன் குமாரரில் முதற்பேறானவனை எனக்குக் கொடுப்பாயாக" (யாத். 22:29).

இங்கே, நம் தேவன் முதல் தரமானவைகளையும், சிறந்த வைகளையும் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார் என்று கற்றுக் கொள்கிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கொடுத் திருந்தபோது அவர்களை மீட்டுக் கொள்ளவும் அனுமதிக்கப்பட் டனர். (எண். 3:46-48).

## V மனப்பூர்வமான காணிக்கைகள் பற்றிய போதனை

" அவைகள் முடிந்த போது வாரங்களின் பண்டிகையை உன் தேவனாகிய கர்த்தருக்கு என்று அனுசரித்து, உன் தேவ னாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்ததற்குத் தக்கதாய் உன் கைக்கு நேர்ந்த மனப்பூர்வமான காணிக்கையாகிய பகுதியைச் செலுத்தி, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி

தெரிந்து கொள்ளும் ஸ்தானத்திலே நீயும், உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும் உன் வாசல்க ளில் இருக்கிற லேவியனும் உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும், திக்கற்ற பிள்ளையும் விதவையும், தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் சந்தோசப்பட்டு.... " (உபா. 16:10-11).

இந்த மனப்பூர்வமான காணிக்கையின் தொகை கொடுப் பவரின் உதாரத்துவத்திற்கே விடப்படுகிறது. மோசே இப்படி யாகக் கட்டளை கொடுத்தார். " அப்பொழுது மோசே இனி புருஷர்களாவது, ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்ய வேண்டாம் என்று பாளையம் எங்கும் கூறும்படி கட்டளையிட்டான். இவ்விதமாய் ஜனங்கள் கொண்டு வருகிறது நிறுத்தப்பட்டது. செய்ய வேண் டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்த துமல்லாமல் அதிகமாயும் இருந்தது" (யாத் 36:6,7) யாரோ ஒருவர் இந்த ஜனங்களுக்கு கொடுக்கும்படியாக போதித்திருக் கிறார்கள். ஏனெனில், கொடுப்பது இயற்கையானதல்ல; ஏனென்றால், மனிதனுடைய சுபாவம் சுயநலமானது. நாம் ஜனங்களுக்கு கர்த்த ருக்குக் கொடுக்கும்படியாய் போதிக்கும் போது, ஒரு சிலர் தவிர பெரும்பாலோர் கண்டிப்பாகக் கொடுப் பார்கள். தேவனே! கொடுத்தல் என்கிற பெரிய பாடத்தைப் பற்றி உம்முடைய சத்தியத்தை பல வருடங்கள் போதிக்காமல் இருந்த தற்காக எங்களை மன்னியும்.

## VI முன் மாதிரிக்காக எழுதப்பட்டது

" தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதி யிருக்கிறது " (ரோமர் 15:4).

பழைய ஏற்பாட்டைப் படித்து, அந்த ஜனங்கள் எவ்வள வாய்க் கொடுக்க கட்டளைப் பெற்றிருந்தார்கள் என்று நாம் கற்றுக் கொள்ளும்போது, நாம் குறைவாகக் கொடுப்பது அநேக ராகிய நம்மை வெட்கப்படுத்த வேண்டும். பழைய ஏற்பாடு முழுவதும் அந்த ஜனங்கள் எப்படியாகக் கொடுத்தார்கள் என்று வாசிக்கி றோம். கொடுக்க வேண்டிய அளவுக்கு கொடுக்காத ஜனங்கள் தண்டனை பெற்றார்கள் என்றும் பார்க்கிறோம். காயீன் இதற்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

மனிதன் கொடுப்பதற்கு ஆரம்பத்திலிருந்து போதிக்கப் பட்டு வந்திருக்கிறான். ஆபேல் உதாரத்துவமாய்க் கொடுத்த படியால் ஆசீர்வதிக்கப்பட்டான். ஆபிரகாமும், யாக்கோபும் மாபெரும் மனிதர்களாக இருப்பதற்கான காரணங்களுள் ஒன்று,

அவர்கள் உதாரத்துவமாய் கர்த்தருக்குக் காணிக்கை கொடுத்தது தான். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் எப்போதும் இப்படியாகத்தான் இருக்கிறது. உதாரத்துவமுள்ள ஆத்துமா செழிக்கும், நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிப்பேன். தேவன் இவைகளைச் செய்வார் என்பதை என் சொந்த அனுபவத்திலிருந்து அறிவேன். " முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப் படும்" (மத். 6:33).

நீங்கள் உதாரத்துவமாய்க் கொடுப்பவராக இல்லாவிட்டால், இன்றே நீங்கள் கொடுக்கத் தொடங்கும்படி உற்சாகப் படுத்துகிறேன். எனக்குத் தனிப்பட்ட முறையிலே தெரிந்த அநேகருடைய சாட்சிகளைக் கொடுக்க இங்கே இடம் வேண்டும் என்று விரும்புகிறேன். நீங்களும் கொடுத்துப் பார்த்தால் இதற்கு முன்பு அறிந்திராத சந்தோஷத்தை உணர்வீர்கள், அனுபவிப் பீர்கள்.

புதிய ஏற்பாட்டு கொடுத்தலை நம்முடைய நாட்களில் மீட்டமைக்க நீங்கள் உதவி செய்வீர்களா?

ஓ, தேவனுடைய உன்னதமான ஊழியர், எனக்காக சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்தின் காட்சியை நான் பார்க்கும் போது, கர்த்தருக்காக தாரளமாய்க் கொடுப்பது மிகச் சிறிய காரியமாகவே படுகிறது. என்னுடைய நேரம், தாலந்து, சொத்து, சுகம் இவைகளில் நான் மிகவும் கடன்பட்டிருக்கிறேன் என்று அறிகிறேன். ஆம், பல லட்சம் மடங்கு நான் கடன்பட்டிருக்கி றேன்.

**(தொடரும்)**

## உங்கள் சிந்தனைக்கு

**கொடுக்க கூடிய சபை தான் வாழ்கிறது.**

**படைக்கக் கூடிய சபை தான் வளருகிறது.**

**தாராளமான சபை தான் பெருகுகிறது.**

**செலவழிக்கக் கூடிய சபை தான் ஜெயிக்கிறது.**

**இறுக்கிப் பிடிக்கும் சபை தான் கண்ணீர் வடிக்கிறது.**

# ஏமாந்து விடாதீர்கள்!

உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள் என்கிறதான வேத வசன அடிப்படையில்தான் இந்த தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது! போலிகளை கண்டு ஏமாறாதீர்கள், கள்ள நோட்டுகளுக்கு எச்சரிக்கை, பிரயாணம் செய்யும் போது உடமைகள் ஜாக்கிரதை; வெளிநாட்டு வேலைக்காக பணத்தை இழக்காதீர்கள், அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு பைனான்ஸ் கம்பெனிகளில் ஏமாறாதீர் மற்றும் சமீபத்தில் செய்திதாள் அடிப்படையில் போலிச்சாமியார்களுக்கு எச்சரிக்கை என்று உலகில் அநேக எச்சரிப்புகள் உண்டு.

கிறிஸ்தவ வாழ்க்கையிலும் அநேக எச்சரிப்புகள் நமக்கு வேதத்தில் உண்டு; அவற்றில் ஒன்று கொலே 2:19ல் "உங்கள் பந்தயப் பொருளை இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" என்பதாகும். இங்கு பந்தயப் பொருள் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு கிடைக்கும் "ஆசீர்வாதம்" ஆகும். கிறிஸ்தவர்கள் அனைவரும் எதிர்பார்க்கும் ஒன்றாக இருந்தாலும் நாம் சரியான உபதேசத்தைக் கைக்கொள்ளும் போது மாத்திரமே அந்த தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியும்! கிறிஸ்துவின் சபையாராகிய நாம் உண்மை உபதேசத்தில் இருப்பது மிகவும் பெருமைப்படவேண்டிய விஷயமாகும்; (எரேமி. 9:23,24; 1கொரி 1:30,31).

இப்படிப்பட்ட இந்த அரிய சிலாக்கியத்தில் இருக்கும் நம்மை சில நாமகரணக் கூட்டத்தாரின் வேற்றுமையான உபதேசங்களினாலோ அல்லது சில மாம்ச சிந்தையுள்ள நண்பர்களின் ஆலோசனையினாலோ நாம் நமது பந்தய பொருளை இழந்து போகும்படி வஞ்சிக்கப்படக்கூடாது. நமது ஆண்டவர் சொல்லிய பரலோக ராஜ்ஜியம் பற்றிய உவமைகள் " சபை வாழ்க்கை " பற்றி குறிப்பிடுவதே ஆகும். அதில் ஒன்று " நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷம் ". அதை அடைய ஒரு மனுஷன் தன்னுடையது எல்லாவற்றையும் கூட விற்றுவிடுவான் (மத். 13:44) என்று இயேசு குறிப்பிடுகிறார். ஆம், நம் விசுவாச சபை வாழ்க்கைக்காக நம் பெருமை, கௌரவம், வருமானம், புகழ், உறவுகள் இன்னும் அநேக காரியங்களை இழக்க நேர்ந்தாலும் சபை வாழ்வே மேன்மையானது என்பதை நாம் சந்தோஷமாக உணர வேண்டும்.

பவுல் அப்போஸ்தலன் மாம்சப் பிரகாரமாக சமுதாயத்தில் அநேக பெருமைகள் கொண்டிருந்தாலும், தேவ அழைப்பின் பந்தய பொருளுக்காக எல்லாவற்றையும் குப்பையாக எண்ணினார் (பிலி. 3:14) நாமும் கூட நம்மிடம் ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராட வேண்டியுள்ளது. நம்மிடம் உள்ள நற்பொருளைக் காத்துக் கொள்ளவே தேவன் நமக்கு பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்திருக்கிறார் (2தீமோ. 1:13,14).

உண்மையில் நாம் இந்த உலகத்தில் அனுபவிக்கக் கிடைக்காத மேன்மையான, நிலையான நன்மைகளும், ஆசீர் வாதங்களும் நமக்கு பரலோகத்தில் அல்லது சபை வாழ்க்கை யில் தேவன் வைத்துள்ளார். அதைப்பெற்றுக் கொள்ள நமக்கு பொறுமையும், தைரியமும் வேண்டும் (எபிரெயர் 10:34,35). உலகம் போகிற போக்கில் வாழ நாம் போராட வேண்டிய தில்லை! ஆகவே, சபை வாழ்வை நாம் சாதாரணமாக எண்ணி விடாமல் நம் செய்கைக்கு பலன் உண்டு என்கிற நிச்சயத்தோடு பூரணப் பலனைப் பெற்றுக்கொள்வோம் (2யோவான் 8 வச). கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதான முண்டாவதாக. ஆமென்.

**சகோ. பாண்டியன், பாண்டி.**

# ஆன்மீக வாழ்க்கைக்கான அளவுகோலை ஏற்படுத்துவது யார்?

தாய் தகப்பனாக, தாத்தா பாட்டியாக இருந்து என் பிள்ளைகள் அவர்களுடைய பிள்ளைகளை வளர்ப்பதை உற்று கவனிக்கும் போது, வாழ்க்கையை எப்படி நடத்துவது என்பது பற்றிய போதனைகளும், ஒழுக்க நடவடிக்கைகளும் தேவை என்பதை புரிந்து கொள்கிறேன். எரேமியா இஸ்ரவேல் புத்திர ரைப் பார்த்து இவைகளை நினைவுப்படுத்தினார். "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடை களை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரேமியா 10:23)

இன்று நம்முடைய உலகில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனை என்னவென்றால் நாம் தொடர்ந்து எதிர்மறையான காரியங்களை செய்யவே முயற்சி செய்கிறோம். எனவே, நம் வழிகளை நாம் நடத்த வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. நாம் வாழ்கின்ற வாழ்க்கையினால் ஒரு மாதிரியை ஏற்படுத்த விரும்புகிறோம். எது சரி, எது தவறு என்பதை தீர்மானிக்கவும் நாம் விரும்புகி றோம். ஜனநாயகமும் சமுதாயமும் இப்படித் தீர்மானிக்க மத சம்மந்தமாகவும் நமக்கு இதே உரிமைகள் இருப்பதாக உணர்கி றோம்.

இஸ்ரவேலும் இவ்விதமாகவே காணப்பட்டது. நியாதி பதிகள் புஸ்தகத்தில் நாம் இரண்டு முறை இவ்விதமாகச் சொல் லப்பட்டிருக்கிறோம். "அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான்" (நியாதிபதிகள் 21:25) (17:6). இங்கே இஸ்ரவேலின் நிலைமையைக் குறித்து சோககரமாகவே விவரிக்கப்பட்டிருக் கிறது, விமர்சிக்கப்பட்டிருக்கிறது, நாமும் எச்சரிக்கையாயிரா விட்டால் இதே நிலைமையில் தான் நம்மை நாம் காண்போம்.

நல்லொழுக்க நெறியை ஏற்படுத்துகிறது யார்? நம்முடைய குடும்பத்தைப் பற்றியோ, அரசாங்கத்திடம் உள்ள நம் உறவைப் பற்றியோ, தேவனிடம் உள்ள நம் உறவைப்பற்றியோ இருந்தா

லும் பரவாயில்லை. நாம் நம் வாழ்க்கையை வாழ ஓர் அளவு கோல் இருக்க வேண்டும். நம்முடைய வழிகளை நடத்த ஓர் அளவுகோல் இல்லையென்றால், இதன் முடிவாக நாம் ஒவ்வொருவரும் நம் பார்வைக்கு சரியானபடி செய்வோம். மனித கலாச்சாரமானது இதைத்தான் வேண்டுமெனக் கேட்கிறது. முற்றிலுமான உண்மை இல்லை என்று எத்தனை முறை சொல்லப் பட்டிருக்கிறது? உங்களுக்கு உண்மை எனப்படுவது எனக்கு உண்மையாக இல்லாமல் இருக்கலாம். ஆயினும் நாம் இருவரு மே சரி என்று சொல்லப்பட்டிருக்கிறோம். இதே கருத்து தான் மத சம்மந்தமான காரியங்களுக்கும் பொருந்துகிறது.

மதப்பிரகாரமாக, நாம் இவ்விதமாக சொல்ல கேள்விப் பட்டிருக்கிறோம். "இது உன் வியாக்கியானம் தான் என் வியாக் கியானம் வித்தியாமானது", நாம் இருவருமே சரியாக இருக்க முடியும். நம்முடைய உலகமானது ஓரினச்சேர்க்கையையும், ஒழுங்கீனமான காரியங்களையும், ஒழுங்கற்ற வியாபார நடை முறைகளையும் ஏற்றுக்கொள்ளும்படியாக அலறுகிறது. மேலும், மதநம்பிக்கைகளின் ஒற்றுமை இயற்கையாகவே இதைப்பின் தொடர்ந்து வருகிறது. உபதேச காரியங்களில் நாம் ஒத்துப் போகாதபோது, ஒன்று நீங்கள் சரியாக இருக்க வேண்டும், நான் தவறாக இருக்க வேண்டும்; அல்லது நான் சரியாக இருக்க வேண்டும், நீங்கள் தவறாக இருக்க வேண்டும்; அல்லது நாம் இருவருமே தவறாக இருக்க வேண்டும். நாம் ஒத்துப் போகாத உபதேச காரியங்களில் நாம் இருவருமே சரியாக இருக்க முடியாது.

சரியும், தவறும் ஒரே குடையின் கீழ் இணைந்திருக்க முடியாது. நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் வழிகளை நடத்த ஓர் அளவுகோல் இருக்க வேண்டும். அந்த அளவுகோலா னது இந்த நாளின் கலாச்சாரமாகவோ, நம்முடைய பாரம்பரிய வளர்ப்பு முறையாகவோ, சூழ்நிலை அறநெறியாகவோ, பெரும் பான்மையுள்ள மத உலகின் பிரபலமான அபிப்பிராய மாகவோ இருக்க முடியாது. மனித இனத்திற்கு தேவனுடைய அளவு கோலை சற்று மாற்றவோ, சரிசெய்யவோ அல்லது ஒருவருடைய தனிப்பட்ட ஜீவியம் அல்லது அபிப்பிராயத்திற்கு ஏற்றாற்போல் வளைக்கவோ எந்த ஒரு சுதந்திரமும் இல்லை. இதை தேவன் கீழ்க்காணும் வசனப்பகுதிகளில் வெளிப்படுத்தியிருக்கிறார் (உபாகமம் 4:2 ; I கொரி 4:6; கலாத்தியர் 1 : 6-9 ; II யோவான் 9, வெளி 22 : 18-19).

நம்பிக்கையற்ற இருள்சூழ்ந்த இந்த உலகத்தில் அவரு டைய வார்த்தையாகிய ஒளியை ஜாக்கிரதையாகவும், கீழ்ப்படித லோடும் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பு கிறார். இப்பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்ளும் படியாக நான் ஜெபிக்கிறேன். இது மாத்திரமே பதிலாயிருக் கிறது.

**Bn Twiner** **Benny Martin**

# நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

**தே**வனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். அந்நாளில் தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (II தெச. 1:7-10).

சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத ஒருவர் நித்திய அழிவில் இழந்து போகிறபடியால் சுவிசேஷம் என்றால் என்ன? அதற்கு எப்படி கீழ்ப்படிவது என்கின்ற கேள்வி எழும்புகிறது.

**சுவிசேஷம் என்றால் என்ன?**

அப்போஸ்தலனாகிய பவுல் இதற்கான விடையைக் கொடுக்கிறார். அன்றியும், சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தப்பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால்; அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து (1கொரி. 15:1-4). ஏசாயா 53 ஆம் அதிகாரத்தை பார்க்கவும்.

நாம் பாவம் செய்ததினால் நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனையை கிறிஸ்து அவராகவே முன்வந்து அந்த தண்டனையை ஏற்றுக்கொண்டார். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23).

**சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது அவ்வளவு அவசரமானதா?**

ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்ற தீர்மானத்தைத் தள்ளிப்போடக்கூடாது என்பதற்கான இரண்டு காரணங்களை நாம் இப்போது காணலாம் :

1. வாழ்க்கையின் நிச்சயமற்றத் தன்மை : நாம் வாழும் வாழ்க்கை நிரந்தரமல்ல என்று அனுதினமும் நினைவுபடுத்தப் படுகிறோம். எதிர்பாராத நேரங்களில் பெரும்பாலும் வியாதி, விபத்து போன்றவைகள் மரணத்தை கொண்டு வருகின்றன. எபி ரெய ஆசிரியர் இப்படியாகச் சொல்கிறார். அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக் கப்பட்டிருக்கிறபடியே (எபிரெயர் 9:27) என்று.

2. எதிர்பாராத விதத்தில் கிறிஸ்துவின் வருகை : கிறிஸ்து எதிர்பாராத நேரத்தில் வருவார் என்று வேதாகமம் போதிக்கிறது. அவருடைய வருகை இரவிலே திருடன் வருகிறவிதமாய் இருக் கும் (1தெச. 5:2). இது எப்போது சம்பவிக்கும் என்று யாருக்கும் தெரியாது.

## சுவிசேஷம் புரட்டப்படுகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்:

சிலர் சுவிசேஷத்தை புரட்டுவார்கள் என்று அப்போஸ்த லனாகிய பவுல் எச்சரித்திருந்தார். வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித் தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (கலா. 1:8).

## யார் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்?

1. மறுபடியும் பிறக்க விரும்புகிற யாவரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் (யோ 3:3-5). சுவிசேஷத்திற்கு கீழ்ப்படி யாததினால் இழந்துபோன யாவரும் இரட்சிக்கப்பட இப்படிச் செய்ய வேண்டும். ஒருவர் கிறிஸ்துவை மனதளவில் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வது போதுமானதல்ல. அது சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவில்லை என்ற குறையை வைக்கிறது.

2. தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப் படிய வேண்டும். உண்மையான ஞானஸ்நானமானது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதலாகும் (ரோமர் 3:7) (கொலோ 2:12; யோ. 3:23). போதிக்கப்படத்தக்கவர்கள்; சுவிசேஷத்தை புரிந்து கொள்ளக்கூடியவர்கள் மாத்திரமே அதற்கு கீழப்படிய வேண் டும். வேத வசனங்களின் அடிப்படையில் தெளிப்பு ஞானஸ் நானம் பெற்ற குழந்தைகள் ஞானஸ்நானம் பெறவில்லை.

3. கிறிஸ்துவை தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளவும், பாவிகளுடைய ஜெபத்தை செய்யும்படியாக சொல்லப்பட்டவர் கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்: இந்த செயல் (லூக்கா 18:9-14) வசனங்களில் நாம் பார்க்கும் ஆயக்காரன், பரிசேயன் சம்பவத்தை அடிப்படையாக வைத்து தவறான முறையில் போதிக்கப்படுவதாகும். இந்த சம்பவமானது நாம் சுயநீதி யுடையவர்களாய் இருக்கக்கூடாது. மாறாக, தாழ்மை மனப்பான் மையை கொண்டிருக்க வேண்டும் என்று நமக்கு போதிக்கிறது. ஒருவர் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்று இது நமக்கு போதிக்கிறது. ஒருவர் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்று இது சொல்லவில்லை. ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவர் இரட்சிக்

கப்படமுடியும் என்று போதிப்பவர்கள் எல்லாம் ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமலே இரட்சிக்கப்பட முடியும் என்று போதிக்கிறார்கள்.

4. ஜெபத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டுவிட்டீர்கள் என்று போதிக்கப்பட்டவர்களெல்லாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்:

கிறிஸ்தவர்கள் பாவம் செய்யும்போது ஜெபிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள் (யாக்கோபு 5:16; அப். 8:22). ஆயினும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத ஒருவர் பாவமன்னிப்பிற்காக ஜெபிக்க வேண்டும் என்று கிறிஸ்துவாலோ அல்லது அவருடைய அப்போஸ்தலர்களாலோ கட்டளை கொடுக்கப்படவில்லை. ஒரு பாவி தேவனுக்கு கீழ்ப்படியும் போதுதான் பாவமன்னிப்பை பெறுகிறார். இரட்சிக்கப்படுவதற்காக அவர் செய்த ஜெபத்தினால் பாவமன்னிப்பை பெறுவதில்லை. புற்றுநோயால் மரணத் தருவாயிலிருந்த ஒரு மனிதர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதோடு இரட்சிப்பிற்கு விசுவாசமும் மனந்திரும்புதலும் அவசியம் என விசுவாசித்த ஒரு பெண்ணை திருமணம் செய்திருந்தார். அந்த பெண் தன்னுடைய பிரசங்கியாரை அந்த மனிதனிடம் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த மனிதன் ஏற்கனவே கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்த ஒரு நபர் தான். அவர் ஏற்கனவே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய தன்னுடைய மனதில் தீர்மானித்திருந்தார். ஆயினும், அந்த பிரசங்கியார் இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதில் நம்பிக்கை இல்லாதவராயிருந்தார். இப்போது மரணத் தருவாயில் படுத்திருந்த அந்த மனிதனின் படுக்கையை சுற்றி இந்த மூன்று பேரும் நின்று கொண்டு அவனுடைய கைகளை பிடித்துக் கொண்டு ஜெபித்தார்கள். அந்த மனிதன் தன் மனைவியைப் பார்த்து நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்று சொன்னான். பாவமன்னிப்பின் கருத்தை அவன் புரிந்து கொள்ளவில்லை. இரட்சிக்கப்படும்படியாக வேதாகமம் என்ன போதிக்கிறதோ அதை அவன் மனைவி புரிந்து கொள்ளவில்லை. பிரசங்கியார் அந்த மனிதனை பரலோக ராஜ்யத்தின் வாசல் வரை கொண்டு போய் விட்டார், ஆனால் அதன் உள்ளே எப்படி பிரவேசிக்க வேண்டும் என்று போதிக்கவில்லை. இரட்சிக்கப்பட என்ன செய்யப்பட வேண்டுமோ அதைத்தான் செய்துவிட்டதாக நினைத்து அந்த மனிதன் மரித்து விட்டான் (அப். 2:38; மாற்கு 16:15,16; அப். 22:16).

நிச்சயமாகவே, நம்முடைய கர்த்தர் கட்டளையிட்டபடியே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. இல்லையென்றால், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவோம் (II தெச. 1:10).


ஆகவே, நாம் ஒவ்வொருவரும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவோம்.

**CLYTONPEPPER** **BENNY MARTIN**

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.


# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| பொதிகை | TV | செவ்வாய் | காலை | 5:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி **BASIC BIBLE COURSE** படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.